**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# மணிப்பூர் கலவரப் பகுதியில் அமித் ஷா ஆய்வு

## அமைதிக்கு குந்தகம் விளைவிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவு

**இம்பால்/சுராசந்த்பூர், மே 30:** மணிப்பூரில் கலவரத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சுராசந்த்பூரில், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா செவ்வாய்க்கிழமை நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், பாதுகாப்புப் படை அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்ட அவர், அமைதிக்கு குந்தகம் விளைவிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார்.

பாஜக ஆட்சி நடைபெற்று வரும் மணிப்பூரில் பெரும்பான்மையாக உள்ள மைதேயி சமூகத்தினர், தங்களுக்கு பழங்குடியின அந்தஸ்து கோரி வருகின்றனர். இந்தக் கோரிக்கையை, குகி மற்றும் நாகா பழங்குடியினர் எதிர்க்கின்றனர்.

இவ்விரு சமூகத்தினருக்கும் இடையே இந்த மாத தொடக்கத்தில் பெரும் கலவரம் மூண்டது. இதில் 80 பேர் வரை உயிரிழந்தனர். ஏராளமான வீடுகளும் வழிபாட்டுத் தலங்களும் தீக்கிரையாக்கப்பட்டன.

இதையடுத்து, ராணுவம் மற்றும் அஸ்ஸாம் ரைஃபிள்ஸ் படையைச் சேர்ந்த 10,000 வீரர்கள் குவிக்கப்பட்டு, நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. வீடிழந்த மக்கள், நிவாரண முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.




மணிப்பூர் தலைநகர் இம்பாலில் பல்வேறு சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் செவ்வாய்க்கிழமை ஆலோசனை மேற்கொண்ட மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, முதல்வர் பிரேன் சிங்.

பலத்த பாதுகாப்புக்கு இடையிலும் வன்முறை சம்பவங்கள் அவ்வப்போது நிகழ்ந்து வருகின்றன. பழங்குடியினருக்கு ஆதரவாக அந்தச் சமூகம் சார்ந்த தீவிரவாதிகள், மைதேயி சமூக கிராமங்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர். இந்த விவகாரத்தில், மத்திய அரசை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்து வருகின்றன.

**அமித் ஷா 4 நாள் பயணம்:** மணிப்பூரில் அமைதியை நிலைநாட்டும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, அந்த மாநிலத்துக்கு 4 நாள் பயணமாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா திங்கள்கிழமை வந்தார்.

அவருடன், உள்துறைச் செயலர் அஜய் குமார் பல்லா, புலனாய்வுப் பிரிவு இயக்குநர் தபன் குமார் தேகா ஆகியோரும் வருகை தந்துள்ளனர்.

தலைநகர் இம்பாலில், முதல்வர் பிரேன் சிங்குடன் அமித் ஷா உள்பட மூவரும் திங்கள்கிழமை இரவு ஆலோசனை மேற்கொண்டனர். இதில், உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு நிவாரண உதவிகள் வழங்க முடிவெடுக்கப்பட்டது. மாநிலத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்ந்துள்ள நிலையில், அதைக் கட்டுப்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

**நிவாரண நிதி அறிவிப்பு:** கலவரத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.10 லட்சம் நிவாரண நிதியும், குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும் வழங்கப்படும் என்று அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. நிவாரணத் தொகையில், மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் பங்களிப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**பல்வேறு தரப்பினருடன் ஆலோசனை:** தனது பயணத்தின் இரண்டாவது நாளான செவ்வாய்க்கிழமை, தலைநகர் இம்பாலில் அனைத்துக் கட்சி பிரதிநிதிகளுடன் அமித் ஷா மற்றும் பிரேன் சிங் ஆலோசனை மேற்கொண்டனர். மைதேயி சமூகத்தினர், மகளிர் அமைப்புகள் உள்பட பல்வேறு தரப்பினருடன் அமித் ஷா கலந்தாலோசித்தார்.

மேலும், மாநில காவல் துறை, மத்திய ஆயுதக் காவல் படை மற்றும் ராணுவ உயரதிகாரிகளின் கூட்டத்தில் பங்கேற்ற அவர், பாதுகாப்பு நிலவரம் குறித்து மறு ஆய்வு செய்தார்.

'மணிப்பூரில் அமைதி மற்றும் வளத்தை உறுதி செய்வதே அரசின் முன்னுரிமையாகும். அமைதிக்கு குந்தகம் விளைவிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்' என்று அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

**கலவரப் பகுதியில்...:** இதைத் தொடர்ந்து, கலவரத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சுராசந்த்பூருக்கு அமித் ஷா உள்ளிட்டோர் ஹெலிகாப்டர் மூலம் சென்றனர்.

அங்கு குகி பழங்குடியின தலைவர்கள், தேவாலயத் தலைவர்கள் உள்ளிட்டோரை சந்தித்துப் பேசிய அமித் ஷா, அவர்களின் கோரிக்கைகள் மற்றும் மாநிலத்தில் அமைதியை உறுதி செய்வதற்கான வழிமுறைகள் குறித்து கருத்துகளைக் கேட்டறிந்தார்.

குகி பழங்குடியினர் அதிகம் வாழும் மாவட்டங்களுக்கு தனி நிர்வாகம் வேண்டுமென்பது அந்தச் சமூகத் தலைவர்களின் கோரிக்கையாக உள்ளது. ஆனால், அந்தக் கோரிக்கையை ஏற்க முடியாது என்று மாநில அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது.

Activate Windows
Go to Settings to activate Windows

# பிற மாநிலத்தவர் தமிழகத்தை தாய் மாநிலமாகக் கருதுகின்றனர்

## ஆளுநர் ஆர்.என்.ரவி



**சென்னை, மே 30:** பிற மாநிலத்தவர் தமிழகத்தை தாய் மாநிலமாகக் கருதி, இங்கு வந்து கல்வி கற்கின்றனர்; தொழில் செய்கின்றனர் என்று ஆளுநர் ஆர்.என்.ரவி கூறினார்.

கோவா மாநிலம் உருவான தின விழா சென்னை கிண்டி ஆளுநர் மாளிகையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. விழாவில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி பேசியது:

சிறந்த கலாசாரம் பண்பாடு கொண்ட அழகான மாநிலம் கோவா. இந்த மாநிலத்தில் பல்வேறு சர்வதேச நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் போர்ச்சுகீசியர் ஆட்சியில் கோவா மக்கள் மிகவும் துன்பப்பட்டனர். இந்தியா ஆன்மிக, கலாசாரம், பண்பாடு கொண்ட நாடு.

சில நாள்களுக்கு முன்பு ஆளுநர் மாளிகையில் குஜராத், மகாராஷ்டிர மாநில தினங்கள் கொண்டாடப்பட்டன. குஜராத்தை சேர்ந்த செளராஷ்டிரா மக்கள் தமிழகத்தில் ஏராளமானோர் வசிக்கின்றனர். அதேபோல் மராட்டிய மக்களும் தமிழகத்தில் அதிகமானோர் வசிக்கின்றனர். இந்த மாநிலத்தைச் சேர்ந்த மக்கள் தமிழகத்துக்கு கல்விக்காகவும், தொழில் நடத்துவதற்காகவும் வருகின்றனர். இவர்கள் தமிழகத்தை தாய் மாநிலமாகவே கருதுகின்றனர்.

அது மட்டுமல்லாமல் தமிழகம் பாதுகாப்பான மாநிலம் என்பதால் இங்கு வருகின்றனர் என்றார் ஆளுநர் ஆர்.என்.ரவி.

முன்னதாக, கோவா மாநில பண்பாடு, கலாசாரம் குறித்த நடன நிகழ்ச்சியும், கோவாவில் நடைபெற்ற விடுதலைப் போராட்டம் குறித்த நாடகமும் நடைபெற்றன.

நடன நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களை ஆளுநர் சால்வை அணிவித்து பாராட்டினார். இந்த நிகழ்வில் ஆளுநரின் முதன்மைச் செயலர் ஆனந்த் ராவ் பாட்டீல், சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் கே.ராமசாமி, எஸ்.டி.எஸ் சேவாசங்கத் தலைவர் தினேஷ் நாயக், தொழிலதிபர் நல்லி குப்புசாமி, விஜயலெக்ஷ்மி பிரபு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

Activate Windows

# மகிளா சம்மான் திட்டத்தில் ரூ.130 கோடி முதலீடு

**சென்னை, மே 30 :** சென்னை நகர மண்டல அஞ்சல் நிலையங்களில் மகிளா சம்மான் திட்டத்தின் கீழ் ரூ.130 கோடிக்கு மேல் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக சென்னை நகர மண்டல அஞ்சல் துறை தலைவர் ஜி.நடராஜன் தெரிவித்துள்ளார்.

அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு : 'மகளிர் மதிப்புத் திட்டம்' எனும் மகிளா சம்மான் சேமிப்புப் பத்திரம் கடந்த மார்ச் 31 –ஆம் தேதி மத்திய நிதி அமைச்சகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இது பெண்களுக்கு நிதி அதிகாரமளிக்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது. அதிக வட்டி விகிதத்தை வழங்குவதால் , இந்தத் திட்டம், பெண்கள் மற்றும் பொது மக்களிடையே விருப்பமான சேமிப்புத் திட்டமாக பிரபலமடைந்துள்ளது. இது இரண்டு ஆண்டு திட்டமாகும்.

இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு பெண் தனக்காகவோ அல்லது தனது 17 வயதுக்குள்பட்ட பெண் குழந்தைக்கு சார்பாக பாதுகாவலரோ குறைந்தபட்ச தொகை ரூ.1,000 முதல் ரூ.2 லட்சத்துக்கு மிகாமல் கணக்கை தொடங்கலாம்.

இந்தத் திட்டத்தில் 7.5 சதவீதம் வட்டி வழங்கப்படும். 6 மாதங்களுக்குப் பிறகு எந்த நேரத்திலும் நிபந்தனைகளுடன் கணக்கை முடித்துக்கொள்ளும் வசதி உள்ளது. கணக்கு தொடங்கப்பட்ட ஓராண்டுக்குப்பின் கணக்கின் இருப்பிலிருந்து 40 சதவீதம் வரை திரும்பப் பெறலாம்.

இந்நிலையில் மகிளா சம்மான் திட்டத்தின் கீழ் கடந்த மே 26–ஆம் தேதி வரை சென்னை நகர மண்டலத்தில் 18,266 கணக்குகள் தொடங்கப்பட்டு ரூ.134.24 கோடி வைப்பு தொகை பெறப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார் அவர்.

EVA STALIN IAS ACADEMY

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# மாவட்ட கலை மன்ற விருது: விண்ணப்பங்கள் வரவேற்பு

**சென்னை, மே 30:** மாவட்ட கலை மன்ற விருதுகளைப் பெற விரும்புவோர் ஜூலை 15-க்குள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும் என்று கலை பண்பாட்டுத் துறை சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கலை பண்பாட்டுத் துறை சார்பில் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

கலை பண்பாட்டுத்துறையின் வாயிலாக தமிழகத்தின் 37 மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்டக் கலை மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அதன் வாயிலாக கலைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில் மாவட்டக் கலை மன்ற விருதுகள், கலை இளமணி (18 வயதுக்கு உள்பட்டோர் - விருது தொகை ரூ.4,000), கலை வளர்மணி (19 வயது முதல் 35 வரை - விருதுத் தொகை ரூ.6,000), கலைச் சுடர்மணி (36 வயது முதல் 50 வரை-விருதுத்தொகை ரூ.10,000), கலை நன்மணி (51 வயது முதல் 65 வரை-ரூ.15,000), கலை முதுமணி (66 மற்றும் அதற்கு மேற்பட்டோர்-விருதுத் தொகை ரூ.20,000) என ஐந்து விருதுகள், ஒவ்வொரு விருது வகையிலும் மூன்று விருதுகள் என மாவட்டம் ஒன்றுக்கு 15 விருதுகள் என்ற அடிப்படையில் ஆண்டொன்றுக்கு 555 விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் 2022-2023 மற்றும் 2023-2024 ஆம் ஆண்டுக்கு மாவட்டக் கலை மன்ற விருதுகளுக்கான விண்ணப்பங்கள் கலை பண்பாட்டுத் துறையால் வரவேற்கப்படுகின்றன.

www.artandculture.tn.gov.in இணைய வழியில் மாவட்டக் கலை மன்ற விருதுக்கு விண்ணப்பித்திட ஏதுவாக விண்ணப்பங்கள் கலைஞர்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. விருதுக்கு விண்ணப்பிக்கும் கலைஞர்கள் தங்களது புகைப்படத்துடன் கூடிய தன்விவரக் குறிப்புடன் (பெயர், பிறந்த தேதி, ஆதார் அடையாள அட்டை, கலைப்பிரிவுகளில் பெற்றுள்ள கல்வித் தகுதிகள், அனுபவம், இதுவரை பெற்ற விருதுகள், சான்றிதழ்கள் உள்ளிட்ட விவரங்களுடன்) கூடிய விண்ணப்பத்தை ஜூலை 15-க்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# தமிழகத்தில் 7.28 லட்சம் வடமாநிலத் தொழிலாளர்கள்

## அமைச்சர் சி.வி.கணேசன் தகவல்

**சென்னை, மே 30:** தமிழகத்தில் 7.28 லட்சம் வடமாநில தொழிலாளர்கள் உள்ளனர் என்றும், தமிழகத்தில் 2025-க்குள் குழந்தைத் தொழிலாளர் இல்லாத நிலை ஏற்படுத்தப்படும் என்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் கூறினார்.

தமிழக அரசின் தொழிலாளர் நலத்துறை சார்பில் தமிழகத்தில் குழந்தைத் தொழிலாளர்கள் இல்லாத மாநிலமாக உருவாக்க அனைத்துத் துறை அலுவலர்களுக்கான பயிற்சி பட்டறை சென்னை தியாகராய நகரில் நடைபெற்றது. இதில் அமைச்சர் சி.வி.கணேசன் பங்கேற்று, பல்வேறு கருத்துகளை எடுத்து வைத்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியது:

தமிழகத்தில் 2025-க்குள் குழந்தைத் தொழிலாளர்கள் இல்லாத நிலையை உருவாக்க வேண்டும் என்று முதல்வர் கூறியிருந்தார். அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் குழந்தை தொழிலாளர்கள் குறைவாகத்தான் உள்ளனர்.

குழந்தைத் தொழிலாளர்கள் இல்லாத நிலை ஏற்படுத்தப்படும். வடமாநிலங்களில் இருந்து குழந்தைத் தொழிலாளர்கள் வருவதைத் தடுக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. தமிழகம் முழுவதும் 7.28 லட்சம் வடமாநிலத் தொழிலாளர்கள் உள்ளனர்.

வடமாநிலத் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார்.

நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முகமது நசிமுத்தின் உள்ளிட்ட உயரதிகாரிகள் பங்கேற்றனர்.




சென்னையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற குழந்தை தொழிலாளர் முறை அகற்றுதல் குறித்து பல்வேறு துறை அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பை செவ்வாய்க்கிழமை தொடங்கிவைத்து பேசிய தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன். உடன் துறையின் கூடுதல் தலைமைச் செயலர் முகமது நசிமுத்தின், ஆணையர் அதுல் ஆனந்த், ரயில்வே கூடுதல் டிஜிபி வே.வனிதா, மாவட்ட நீதிபதி முரளிதரன், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் செந்தில்குமார்.

Activate Windows

# அரசு நிர்வாகத்தில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம்

## ஜப்பான் நிறுவனத்துடன் முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை



டோக்கியோவில் உள்ள அதிநவீன தகவல் தொழில்நுட்ப மற்றும் மின்னணு நிறுவனமான நெக் ஃப்யூச்சர் கிரியேஷன் மையத்துக்கு செவ்வாய்க்கிழமை சென்று, நவீன தொழில்நுட்பம் வாயிலாக அங்குள்ள வசதிகளைப் பார்வையிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின்.

**சென்னை, மே 30:** தமிழகத்தில் அரசு நிர்வாகம், பொது பயன்பாட்டு வசதிகளில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை உபயோகப்படுத்துவது தொடர்பாக, டோக்கியோவில் உள்ள அதிநவீன தகவல் தொழில்நுட்ப மற்றும் மின்னணு மையத்தின் உயர் அலுவலர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் செவ்வாய்க்கிழமை ஆலோசனை நடத்தினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஜப்பான் தலைநகரான டோக்கியோவில் பயணம் மேற்கொண்டு வருகிறார்.

அதன் ஒரு பகுதியாக, டோக்கியோவில் உள்ள உலகின் அதிநவீன தகவல் தொழில்நுட்ப மற்றும் மின்னணு நிறுவனமான என்.இ.சி. ஃப்யூச்சர் கிரியேஷன் மையத்துக்கு அவர் செவ்வாய்க்கிழமை சென்று பார்வையிட்டு, அங்குள்ள நவீன வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்த மையம் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கு வசதியாக, ஊடாடும் உரையாடல்கள், நேரடி அனுபவங்கள் மூலம் தொழில்நுட்பமும் வணிகமும் ஒன்றிணையும் இடமாகும். சமூகப் பிரச்னைகளைத் தீர்க்கும் தொழில்நுட்பத்தை உருவாக்குவது முதல், செயற்கை நுண்ணறிவு மற்றும் பயோமெட்ரிக் அங்கீகார தொழில்நுட்பங்களின் வளர்ச்சி வரை புதிய மதிப்பை உருவாக்கி வருகிறது.

**முதல்வர் பார்வை:** இந்த மையத்தை பார்வையிட்ட முதல்வரிடம், விமான நிலையங்களில் மின்னணு சுங்க அறிவிப்பு வாயில் மூலமாக முக அங்கீகார தொழில்நுட்பம், வேகமான சுங்க அனுமதி, நெரிசலற்ற சுங்க ஆய்வுத்தளங்கள், காத்திருப்பு நேரத்தைக் குறைத்தல் என மன அழுத்தம் இல்லாத விமானப் பயணத்தை மேற்கொள்வதற்கான நடைமுறை வழிவகைகள் குறித்து மைய அலுவலர்கள் விளக்கினர்.

இந்த அதிநவீன விமானப் பயண முறை அட்லாண்டா உள்ளிட்ட பல்வேறு விமான நிலையங்களிலும் செயல்பட்டு வருகிறது என்றும் முதல்வரிடம் அவர்கள் தெரிவித்தனர்.

துறைமுக கண்காணிப்பு, தொழிற்சாலை மேலாண்மை, ரயில் போக்குவரத்து மேலாண்மை தொடர்பு, சாலைப் போக்குவரத்து மேலாண்மை, தீயணைப்பு அமைப்புகள், தகவல் தொடர்பு அமைப்புகள், விமானப் போக்குவரத்துகட்டுப்பாடு, வங்கி ஏடிஎம்கள், டிஜிட்டல் தொலைக்காட்சி பரிமாற்றம், மின்னணு அரசாங்கம், நீர் மேலாண்மை, செயற்கைக்கோள் தகவல் தொடர்பு போன்ற கடல் முதல் விண்வெளி வரை அனைத்து நிர்வாகத்திலும் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தீர்வு கண்டு வருவதைப் பற்றியும் முதல்வரிடம் அவர்கள் விளக்கினர்.

**செயற்கை நுண்ணறிவு நுட்பம்:** இந்த மையத்தின் உயர் அலுவலர்களுடன் தமிழகத்தில் செயற்கை நுண்ணறிவு நுட்பத்தை எவ்வாறெல்லாம் பயன்படுத்தலாம் என்பது குறித்து முதல்வர் ஆலோசனை நடத்தினார்.

தமிழகத்துக்கான முக அங்கீகார செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் கம்ப்யூட்டிங் நோக்கம், தமிழ்நாடு அரசின் நிர்வாகத்திலும், பொது பயன்பாட்டு வசதிகளிலும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது குறித்தும் இந்த சந்திப்பில் ஆலோசிக்கப்பட்டது.

நிகழ்வில் தமிழக தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலர் எஸ்.கிருஷ்ணன், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு உள்ளிட்ட உயரதிகாரிகள் உடனிருந்தனர்.

# 2022–23–இல் வங்கிகளில் ரூ.30,252 கோடி மோசடி




மும்பை, மே 30: கடந்த நிதியாண்டில் (2022–23) வங்கிகளில் ரூ.30,252 கோடி மோசடி நடைபெற்றதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ரிசர்வ் வங்கி செவ்வாய்க்கிழமை வெளியிட்ட ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 3 ஆண்டுகளில் வெவ்வேறு வகை வங்கிகளில் நடைபெற்ற மோசடிகளை ஆய்வு செய்ததில், தனியார் வங்கிகளில் எண்ணிக்கை அடிப்படையில் அதிக மோசடிகள் நடைபெற்றுள்ளன. அதேவேளையில் 2022–23–இல் பொதுத் துறை வங்கிகளில் அதிக அளவிலான தொகை மோசடி செய்யப்பட்டுள்ளது.

2022–23–இல் எண்ணிக்கை அடிப்படையில், அதிக அளவிலான மோசடிகள் கடன்(கிரெடிட்) மற்றும் பற்று (டெபிட்) அட்டைகள், இணையம் போன்ற எண்ம (டிஜிட்டல்) பரிவர்த்தனைகளில் நடைபெற்றுள்ளன. மதிப்பு அடிப்படையில், அதிக அளவிலான மோசடிகள் வங்கிக் கடன்கள் பிரிவில் நடைபெற்றுள்ளன. தனியார் வங்கிகளில் நடைபெற்ற மோசடிகளில் எண்ம பரிவர்த்தனை மோசடிகள் அதிகம். பொதுத் துறை வங்கிகளில் கடன் மோசடிகள் அதிகம்.

2022–23–ஆம் நிதியாண்டில் வங்கிகளில் மொத்தம் ரூ.30,252 கோடி மோசடி நடைபெற்றது. மோசடிகளின் மொத்த எண்ணிக்கை 13,530. இதில் பொதுத் துறை வங்கிகளில் ரூ.21,125 கோடி மோசடி நடைபெற்றது. மோசடிகளின் மொத்த எண்ணிக்கை 3,405.

இதேபோல தனியார் வங்கிகளில் ரூ.8,727 கோடி மோசடி நடைபெற்றது. மோசடிகளின் மொத்த எண்ணிக்கை 8,932. இதர மோசடிகள் வெளிநாட்டு வங்கிகள், நிதி நிறுவனங்கள் உள்ளிட்டவற்றில் நடைபெற்றுள்ளன. ரூ.30,252 கோடி மோசடியில் 95 சதவீதம், அதாவது ரூ.28,792 கோடி கடன் சார்ந்த மோசடிகளாகும்.

ஓராண்டில் தெரிவிக்கப்படும் மோசடிகள், அந்த ஆண்டில்தான் நடைபெற்றது என்று அர்த்தமல்ல. அந்த மோசடிகள் பல ஆண்டுகளுக்கு முன்பே நடைபெற்றிருக்கலாம். அதுகுறித்த தகவல் பின்னர் வெளியாகக் கூடும்.

மோசடி செய்யப்பட்ட தொகை வங்கிகளுக்கு ஏற்பட்ட இழப்பை குறிக்கவில்லை.

ஏனெனில் மோசடி செய்யப்பட்ட தொகையை மீட்கும்போது வங்கிகளுக்கு ஏற்பட்ட இழப்பு குறையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொருளாதார வளர்ச்சி வேகம் தொடர வாய்ப்பு

நிகழ் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வேகம் தொடர வாய்ப்புள்ளது என்று ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த வங்கியின் ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒட்டுமொத்தப் பொருளாதாரம் எவ்வாறு செயல்படுகிறது என்பதை ஆய்வு செய்யும் வலுவான பருவினப் பொருளியல் கொள்கைகள், மெல்ல குறையும் பண்டங்களின் விலை, வலுவான நிதித் துறை, ஆரோக்கியமான கார்ப்பரேட் துறை, அரசு செலவினங்களின் தரத்தில் நிதிக் கொள்கையின் தொடர் அழுத்தம், விநியோக முறைகளின் உலகளாவிய மறுசீரமைப்பில் இருந்து உருவாகும் வளர்ச்சி வாய்ப்புகள் ஆகியவற்றின் பின்னணியில், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வேகம் நிகழ் நிதியாண்டில் தொடர வாய்ப்புள்ளது.

பணவீக்க அழுத்தம் குறையும் சூழலில், பொருளாதார வளர்ச்சி வேகம் நீடிக்க வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செலாவணி புழக்க மதிப்பு 7.8% அதிகரிப்பு

## ஆர்பிஐ அறிக்கையில் தகவல்

மும்பை, மே 30: கடந்த 2022-23-ஆம் நிதியாண்டில் செலாவணி புழக்க மதிப்பு 7.8 சதவீதமும், செலாவணிகளின் எண்ணிக்கை 4.4 சதவீதமும் அதிகரித்ததாக இந்திய ரிசர்வ் வங்கி ஆர்பிஐ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நிதியாண்டுக்கான இந்திய ரிசர்வ் வங்கியின் ஆண்டறிக்கை செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விவரங்கள்:

கடந்த நிதியாண்டில் புழக்கத்தில் இருந்த செலாவணிகளின் மொத்த மதிப்பில் ரூ.2,000, ரூ.500 ஆகியவற்றின் பங்கு 87.9 சதவீதமாக இருந்தது. இது அதற்கு முந்தைய நிதியாண்டில் 87.1 சதவீதமாக இருந்தது. புழக்கத்தில் இருந்த மொத்த செலாவணிகளின் அவற்றின் மொத்த மதிப்பு ரூ.3,62,220 கோடியாகும். கடந்த ஆண்டு மார்ச்சில் புழக்கத்தில் இருந்த ரூ.2,000 நோட்டுகளின் எண்ணிக்கை மொத்த செலாவணிகளில் 1.6 சதவீதமாக இருந்த நிலையில், கடந்த மார்ச்சில் அது 1.3 சதவீதமாகக் குறைந்தது.

அதே காலகட்டத்தில், புழக்கத்தில் இருந்த செலாவணிகளின் மதிப்பில் ரூ.2,000 நோட்டுகளின் பங்கு 13.8 சதவீதத்தில் இருந்து 10.8 சதவீதமாகக் குறைந்தது.

எண்ம ரூபாயும் புழக்கத்தில் உள்ளது. புழக்கத்தில் உள்ள மொத்தவிலை அடிப்படையிலான எண்ம ரூபாயின் மதிப்பு ரூ.10.69 கோடியாகவும், சில்லறை விலை அடிப்படையிலான எண்ம ரூபாய் மதிப்பு ரூ.5.70 கோடியாகவும் உள்

EVA STALIN IAS ACADEMY

எண்ணிக்கையில் ரூ.500 நோட்டுகளின் பங்களிப்பு 37.9 சதவீதம் ஆகும்.

ரூ.10 நோட்டுகளின் பங்களிப்பு 19.2 சதவீதம். 5,16,338 லட்சம் அளவிலான ரூ.500 நோட்டுகள் புழக்கத்தில் இருந்தன. அவற்றின் மொத்த மதிப்பு ரூ.25,81,690 கோடியாகும். 2022-ஆம் ஆண்டு மார்ச் நிலவரப்படி 4,55,468 லட்சம் ரூ.500 நோட்டுகள் புழக்கத்தில் இருந்தன.

கடந்த மார்ச் நிலவரப்படி 4,55,468 லட்சம் ரூ.2,000 நோட்டுகள் புழக்கத்தில் இருந்தன.

ளது.

கடந்த நிதியாண்டிலும் அதற்கு முந்தைய நிதியாண்டைப் போல ரூ.2,000 நோட்டுகள் அச்சிடப்படவில்லை. கடந்த நிதியாண்டில் கண்டறியப்பட்ட ரூ.20 கள்ளநோட்டுகளின் எண்ணிக்கை 8.4 சதவீதமும், ரூ.500 கள்ள நோட்டுகளின் எண்ணிக்கை 14.4 சதவீதமும் அதிகரித்துள்ளது.

மற்ற செலாவணிகளில் கண்டறியப்பட்ட கள்ள நோட்டுகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# புகையிலைப் பொருள்கள் விற்பனைக்கு விரைவில் புதிய நடைமுறை

## உரிமம் உள்ள கடைகளில் மட்டுமே இனி பீடி, சிகரெட் விற்க முடியும்

சென்னை, மே 30: பீடி, சிகரெட் ஆகிய புகையிலைப் பொருள்களை விற்பனை செய்வதற்கு தனி உரிமம் பெறும் நடைமுறை விரைவில் அமலாக்கப்பட உள்ளதாக சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புதிய விதிகள் நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு பெட்டிக் கடை, தேநீர் கடைகளில் தற்போது உள்ளதைப் போல வரும் நாள்களில் பீடி, சிகரெட் விற்க முடியாது. உரிமம் உள்ள கடைகளில் மட்டுமே அவற்றை விற்பனை செய்ய முடியும். அதிலும், அந்தக் கடைகளில் பீடி, சிகரெட்டைத் தவிர்த்து வேறு எதையும் விற்க இயலாது.

அந்த விதிகளை மீறும்பட்சத்தில், சம்பந்தப்பட்டவர்களின் கடைகளுக்கான உரிமத்தை ரத்து செய்யவும், சட்ட நடவடிக்கை எடுக்கவும் வரைவுத் திட்டத்தில் விதிகள் வகுக்கப்பட்டுள்ளன.

சர்வதேச தரவுகளை ஆய்வு செய்தால் உலக அளவில் சீனாவுக்கு அடுத்து இந்தியாவில்தான் பீடி, சிகரெட் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. அதன் விளைவாக இங்கு 20 கோடிக்கும் அதிகமானோர் புகையிலைப் பழக்கத்துக்கு அடிமையாகியுள்ளதாக சுகாதார ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலை தொடர்ந்தால், அடுத்த 10 ஆண்டுகளில் நாட்டின் மொத்த இறப்பு விகிதத்தில் 13 சதவீதத்துக்கு புகையிலை பாதிப்பே காரணமாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து அதன் பயன்பாட்டைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் முன்னெடுத்து வருகின்றன.

இதுதொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டது. அதை ஏற்று, உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், ஜார்க்கண்ட் உள்ளிட்ட சில மாநிலங்கள் பீடி, சிகரெட் விற்பனைக்கு மட்டும் தனி உரிமத்தை வழங்கியுள்ளன.

இந்த நிலையில், தமிழகத்திலும் அது போன்றதொரு கட்டுப்பாட்டை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டது. அதற்கான வரைவுத் திட்டம் சில ஆண்டுகளுக்கு முன்பே வகுக்கப்பட்டது. கரோனா பெருந்தொற்று காரணமாக அதை அப்போது நடைமுறைப்படுத்த முடியவில்லை. தற்போது அதைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுகுறித்து தமிழ்நாடு புகையிலைக் கட்டுப்பாட்டுக்கான பொது சுகாதாரத் துறை இணை இயக்குநர் டாக்டர் கிருஷ்ணராஜ் கூறியதாவது:

தமிழகத்தில் பல லட்சம் பெட்டிக் கடைகள், சிறிய மளிகைக் கடைகள், தேநீரகங்கள் உள்ளன. அவை அனைத்திலும் பீடி, சிகரெட் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. 18 வயதுக்குள்பட்ட சிறாருக்கு அவற்றை விற்பனை செய்யக் கூடாது; அதுகுறித்த அறிவிப்புப் பலகைகள் வைத்திருக்க வேண்டும் என எத்தனையோ விதிகள் இருந்தாலும், அவற்றை மீறி புகையிலைப் பொருள்கள் விற்பனை அளவுக்கு அதிகமாக நடைபெற்றுக் கொண்டேதான் இருக்கிறது.

அதைக் கருத்தில்கொண்டே, புதிய நடைமுறையை அமலாக்கத் திட்டமிட்டுள்ளோம். அதன் வாயிலாக, பீடி, சிகரெட் விற்பனையைக் குறைக்க முடியும். சிறுவர்கள், குழந்தைகளிடையே புகைப் பழக்கம் பரவாமல் இருப்பதை ஓரளவு கட்டுப்படுத்த முடியும். அதற்கான வரைவுத் திட்டம் இறுதி செய்யப்பட்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. அதன் பின்னர் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் அதற்கான உரிமங்களை வழங்கலாம் என்றார் அவர்.

சர்வதேச புகையிலை ஒழிப்பு தினம் உலகம் முழுவதும் புதன்கிழமை (மே 31) கடைப்பிடிக்கப்பட உள்ள நிலையில், இதுபோன்ற நடவடிக்கைகளை சுகாதாரத் துறை விரைந்து அமல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.



### ‘15 லட்சம் பேர் இறப்பு’

இந்தியாவில் புகையிலையால் ஏற்படும் நோய்களுக்கு ஆண்டுக்கு 15 லட்சம் பேர் உயிரிழப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேபோன்று புகையிலைப் பயன்பாட்டால் நாட்டின் பொருளாதாரத்தில் ரூ.1.6 லட்சம் கோடி இழப்பு ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து எம்ஜிஎம் மருத்துவமனையின் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் ராஜா கூறுகையில், ‘இந்தியாவில் நான்கில் ஒருவருக்கு ஏதோ ஒரு வகையிலான புகையிலைப் பழக்கம் உள்ளது; அவர்களில் 90 சதவீதம் பேர் ஆண்கள்; புகையிலையால் உடல் நலிவுற்று பணித் திறன் பாதிக்கப்படுவதால் 1.6 லட்சம் கோடி உற்பத்தி இழப்பு ஏற்படுகிறது’ என்றார்.

ரேலா மருத்துவமனையின் நுரையீரல் இடையீட்டு சிகிச்சை நிபுணர் டாக்டர் பென்ஹர் ஜோயல் ஷத்ராத் கூறியதாவது:

ஆண்டுதோறும் எங்களிடம் நுரையீரல் அடைப்பு நோய் (சிஓபிடி) சிகிச்சைக்கு வரும் 700-க்கும் மேற்பட்டோரில் 70 சதவீதம் பேருக்கு புகையிலைப் பழக்கம் உள்ளது தெரியவந்தது.

புகைப் பழக்கத்தை கைவிட உதவும் சிறப்பு கிளினிக்குகளை உருவாக்க வேண்டும். அதேபோன்று அவர்களுக்கு உளவியல் சிகிச்சைகளை வழங்குவதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்க வேண்டும் என்றார் அவர்.

## 18–ஆவது காலாண்டு தொழிலாளர் கணக்கெடுப்பு

# வேலைவாய்ப்பின்மை விகிதம் 6.8 சதவீதமாக குறைவு

**புது தில்லி, மே 30:** நிகழாண்டின் ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையிலான முதல் காலாண்டில் நகர்ப்பகுதிகளில் 15 வயதுக்கும் அதிகமான நபர்களின் வேலைவாய்ப்பின்மை விகிதம் 6.8 சதவீதமாக குறைந்துள்ளது.

கரோனா பெருந்தொற்றின் பாதிப்பு காரணமாக கடந்தாண்டு இதே காலகட்டத்தில் 8.2 சதவீதமாக இருந்த வேலைவாய்ப்பின்மை விகிதம் நிகழாண்டின் முதல் காலாண்டில் 1.4 சதவீதம் குறைந்து 6.8 சதவீதமாக உள்ளது.

கடந்த 2017–ஆம் ஆண்டு முதல் நாட்டின் தொழிலாளர் வளம் குறித்து வாராந்திர அளவில் சேகரிக்கப்படும் தகவல்களின்படி வேலைவாய்ப்பின்மை விகிதம், பணியாளர் மக்கள்தொகை விகிதம், தொழிலாளர் பங்கேற்பு விகிதம் ஆகியவற்றை கணக்கிடும் 'காலாண்டு தொழிலாளர் கணக்கெடுப்பை(பிஎல்எஃப்எஸ்)' தேசிய புள்ளிவிவர சேவை அலுவலகம்(என்எஸ்எஸ்ஓ) நடத்தி வருகிறது. கடந்த ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையிலான 3 மாதங்களுக்கு கணக்கிடப்பட்ட 18–ஆவது காலாண்டு தொழிலாளர் கணக்கெடுப்பின் விவரங்கள்:

**வேலைவாய்ப்பின்மை விகிதம்...:** நகர்ப்பகுதிகளில் 15 வயதுக்கும் அதிகமான நபர்களின் வேலைவாய்ப்பின்மை விகிதமானது கடந்தாண்டு ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலாண்டில் 8.2 சதவீதமாகவும், அதற்கடுத்த ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலாண்டில் 7.6 சதவீதமாகவும், ஜூலை முதல் செப்டம்பர் வரை மற்றும் அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான 2 காலாண்டுகளுக்கு 7.2 சதவீதமாகவும் இறக்கத்தை கண்டு வந்தது.

நிகழாண்டின் முதல் காலாண்டில் வேலைவாய்ப்பின்மை விகிதம் 6.8 சதவீதமாக குறைந்துள்ளது.

**ஆண்களுக்கு இடையிலான வேலைவாய்ப்பின்மை விகிதம்...:** 15 வயதுக்கும் அதிகமான ஆண்களுக்கு இடையிலான வேலைவாய்ப்பின்மை விகிதமானது கடந்தாண்டு ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலாண்டில் 7.7 சதவீதமாகவும், அதற்கடுத்த ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலாண்டில் 7.1 சதவீதமாகவும், ஜூலை முதல் செப்டம்பர் வரையில் 6.6 சதவீதமாகவும், அக்டோபர் முதல் டிசம்பர் வரையில் 6.5 சதவீதமாகவும் இறக்கம் கண்டது. நிகழாண்டின் முதல் காலாண்டில் ஆண்களுக்கு இடையிலான வேலைவாய்ப்பின்மை விகிதம் 6 சதவீதமாக குறைந்துள்ளது.

**பெண்களுக்கு இடையிலான வேலைவாய்ப்பின்மை விகிதம்...:** 15 வயதுக்கும் அதிகமான பெண்களுக்கு இடையிலான வேலைவாய்ப்பின்மை விகிதமானது கடந்தாண்டு ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலாண்டில் 10.1 சதவீதமாகவும், அதற்கடுத்த ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலாண்டில் 9.5 சதவீதமாகவும், ஜூலை முதல் செப்டம்பர் வரையில் 9.4 சதவீதமாகவும், அக்டோபர் முதல் டிசம்பர் வரையில் 9.6 சதவீதமாகவும் இருந்தது. நிகழாண்டின் முதல் காலாண்டில் பெண்களுக்கு இடையிலான வேலைவாய்ப்பின்மை விகிதம் 9.2 சதவீதமாக குறைந்துள்ளது.

**தொழிலாளர் பங்கேற்பு விகிதம்....:** நகர்ப்பகுதிகளில் 15 வயதுக்கும் மேலான தொழிலாளர்கள் பங்கேற்பு விகிதமானது கடந்தாண்டு ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலாண்டில் 47.3 சதவீதமாகவும், அதற்கடுத்த ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலாண்டில் 47.5 சதவீதமாகவும், ஜூலை முதல் செப்டம்பர் வரையில் 47.9 சதவீதமாகவும், அக்டோபர் முதல் டிசம்பர் வரையில் 48.2 சதவீதமாகவும் அதிகரித்து வந்தது. நிகழாண்டின் முதல் காலாண்டில் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 48.5 சதவீதமாக ஏற்றம் கண்டுள்ளது.

**பணியாளர் மக்கள்தொகை விகிதம்:** நகர்ப்பகுதிகளில் 15 வயதுக்கும் மேலான பணியாளர் மக்கள்தொகை விகிதமானது கடந்தாண்டு ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலாண்டில் 43.4 சதவீதமாகவும், அதற்கடுத்த ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலாண்டில் 43.9 சதவீதமாகவும், ஜூலை முதல் செப்டம்பர் வரையில் 44.5 சதவீதமாகவும், அக்டோபர் முதல் டிசம்பர் வரையில் 44.7 சதவீதமாகவும் அதிகரித்தது.

நிகழாண்டின் முதல் காலாண்டில் பணியாளர் மக்கள்தொகை விகிதம் 45.2 சதவீதமாக அதிகரித்துள்ளது.

Activate Windows
Go to Settings to activate Windows

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# வளர்ந்த இந்தியாவைக் கட்டமைக்க கடினமாக உழைப்போம்: பிரதமர் மோடி

**புது தில்லி, மே 30:** இந்தியாவை வளர்ந்த தேசமாக கட்டமைக்க நாங்கள் இன்னும் கடினமாக உழைப்போம் என தனது அரசின் 9-ஆம் ஆண்டு நிறைவையொட்டி பிரதமர் மோடி நாட்டு மக்களுக்குத் தெரிவித்துள்ளார்.

மத்தியில் பாஜக ஆட்சிப் பொறுப்பேற்று 9 ஆண்டுகள் நிறைவு பெற்றதை அடுத்து நாடு முழுவதும் பாஜகவினர் உற்சாகக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் பாஜக தொண்டர்களுக்கும் நாட்டு மக்களுக்கும் நன்றிக் கூறி பிரதமர் மோடி செவ்வாய்க்கிழமை ட்விட்டரில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

தேசத்துக்கான சேவையில் இன்று 9- ஆம் ஆண்டை நாங்கள் நிறைவு செய்திருக்கிறோம். உங்களுக்கு நான் தன்னடக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

9 ஆண்டுகால ஆட்சியில், மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு அனைத்து முக்கிய முடிவுகளும் நிறைவேற்றப்பட்டன, அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. வளர்ந்த இந்தியாவைக் கட்டமைக்க நாங்கள் தொடர்ந்து கடினமாக உழைப்போம்.

கடந்த 9 ஆண்டுகளில் ஏழைகளின் வாழ்வாதாரத்தையும் கண்ணியத்தையும் நிலைநாட்ட நாங்கள் பாடுபட்டுள்ளோம். எண்ணிலடங்கா முயற்சிகள் மூலமாக தேசத்தில் பல கோடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மாற்றியமைத்தோம்.

ஒவ்வொரு குடிமகனும் வாழ்வில் முன்னேற்றம் காணவும், அவர்களின் கனவு நிறைவேறவும் எங்கள் பணி தொடரும் என்று குறிப்பிட்டுள்ளார். அந்தப் பதிவில் பாஜக அரசின் நலத்திட்டப் பணிகள் தொடர்பான விளக்கப்படத்தையும் பிரதமர் மோடி பகிர்ந்துள்ளார்.

பாஜக ஆட்சிப் பொறுப்பேற்று 9 ஆண்டுகள் நிறைவு பெற்றதை அடுத்து செவ்வாய்க்கிழமை முதல் ஜூன் மாதம் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் கொண்டாட அக்கட்சியினர் திட்டமிட்டுள்ளனர். அதன் ஒரு பகுதியாக ராஜஸ்தான் மாநிலம், அஜ்மீரில் புதன்கிழமை நடைபெறும் பேரணியில் பிரதமர் மோடி கலந்து கொள்கிறார்.

பாஜக ஆட்சி செய்யும் மாநில முதல்வர்கள், மத்திய அமைச்சர்கள் உள்பட கட்சியின் மூத்த தலைவர்கள் அனைவரும் திங்கள்கிழமை அன்றே பாஜகவின் சாதனைகளை நாடு முழுவதும் கொண்டு சென்றனர்.

உலக அளவில் இந்தியாவின் அந்தஸ்து உயர்ந்திருப்பது முதல் தேசத்தின் பாதுகாப்பு வரை அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், மக்கள் நலத் திட்டப் பணிகளான வீடு கட்டும் திட்டம், கழிவறை கட்டும் திட்டம், குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் உள்ளிட்ட திட்டப் பணிகள் மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி, உற்பத்தித் துறையின் முன்னேற்றத்துக்கான அரசின் முயற்சிகள் போன்ற பணிகளை பத்திரிகையாளர்கள் சந்திப்பு மூலம் நாட்டு மக்களுக்கு அவர்கள் தெரிவித்தனர்.

Activate Windows
Go to Settings to activate Windows.

# இலங்கை: கடனை செலுத்துவதற்கான அவகாசம் ஓராண்டுக்கு நீட்டிப்பு

## இந்தியா முக்கிய உதவி

கொழும்பு, மே 30: இலங்கைக்கு வழங்கிய 100 கோடி அமெரிக்க டாலர் மதிப்பிலான கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான அவகாசத்தை மேலும் ஓராண்டுக்கு இந்தியா நீட்டித்துள்ளது.

கடும் நிதி நெருக்கடியில் இருந்து இலங்கை மீண்டு வரும் நிலையில், இந்த அவகாச நீட்டிப்பு உதவியை இந்தியா வழங்கியுள்ளது.

இதுவரை கண்டிராத கடும் நிதி நெருக்கடியை இலங்கை சந்தித்தது. அதையடுத்து, அந்நாட்டுக்கு இந்தியா நிதியுதவிகளையும் கடனுதவியையும் வழங்கியது. சர்வதேச நிதியத்தில் (ஐஎம்எஃப்) இலங்கை கடன் பெறவும் இந்தியா உதவியது.

இலங்கைக்கு 100 கோடி அமெரிக்க டாலர் கடனுதவியை வழங்குவதற்கான ஒப்பந்தம் அந்நாட்டு அரசுக்கும் எஸ்பிஐ-க்கும் இடையே கடந்த ஆண்டு மார்ச்சில் கையொப்பமானது. அந்தக் கடனைத் திருப்பி வழங்குவதற்கான அவகாசத்தை மேலும் ஓராண்டுக்கு இந்தியா நீட்டித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட ட்விட்டர் பதிவில், 'இலங்கை மக்களின் நலனைக் காக்க இந்தியா மீண்டும் உறுதியளிக்கிறது. ஏற்கெனவே வழங்கப்பட்ட 100 கோடி அமெரிக்க டாலர் மதிப்பிலான கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான அவகாசம் 2024 மார்ச் என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தற்போது அந்த அவகாசம் மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த உதவியானது மருந்துப் பொருள்கள், உணவுப் பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை மேலும் ஓராண்டுக்குக் கொள்முதல் செய்ய வழிவகுக்கும். இலங்கைக்கு கடந்த ஆண்டில் சுமார் 400 கோடி அமெரிக்க டாலர் மதிப்பிலான கடனுதவியை இந்தியா வழங்கியது.

அதன் மூலமாக எரிபொருள், உணவுப் பொருள்கள், மருந்துப் பொருள்கள், தொழிலகப் பொருள்கள் உள்ளிட்டவற்றை இலங்கை அரசு கொள்முதல் செய்தது. இலங்கை மக்களுக்கும் அந்நாட்டு அரசுக்கும் தேவையான உதவிகளை இந்தியா தொடர்ந்து வழங்கும். பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை விரைந்து மீள்வதற்கான உதவிகளை இந்தியா தொடர்ந்து வழங்கும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# எல்லையில் சீன ராணுவக் குவிப்பு சவாலாகத் தொடர்கிறது

**புனே, மே 30:** எல்லையில் சீன ராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளது சவாலாகத் தொடர்கிறது என்று முப்படை தலைமைத் தளபதி அனில் சௌஹான் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மகாராஷ்டிர மாநிலம் புனேயில் இந்தியன் ராணுவப் பயிற்சி அகாதெமி பயிற்சி நிறைவு விழாவில் பங்கேற்ற பின்னர் அவர் செய்தியாளர்களிடம் செவ்வாய்க்கிழமை தெரிவித்ததாவது:

இந்தியாவின் வடக்கு எல்லைகளில் சீன ராணுவ வீரர்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரிக்கவில்லை. 2020-ஆம் ஆண்டு இருந்த நிலைதான் தற்போதும் நீடிக்கிறது. அவர்கள் எல்லைகளில் இருந்து திரும்பிச் செல்லவில்லை.

எனவே அங்கு சவால் நிலவுகிறது. அங்கு எந்தவொரு விரும்பத் தகாத சூழலும் ஏற்படாமல் இருப்பதற்கான ஒவ்வொரு நடவடிக்கையையும் இந்திய ராணுவம் மேற்கொண்டு வருகிறது. இந்தியா உரிமை கோரும் எல்லை கட்டுப்பாட்டு கோட்டுப் பகுதியின் சட்டப்படியான நிலையை பராமரிப்பதில் நமது வீரர்கள் உறுதியாக உள்ளனர்.



முப்படை தலைமைத் தளபதி அனில் சௌஹான்

எல்லை விவகாரத்துக்கு தீர்வு காண்பது என்பது வேறு விஷயம். ஆனால் தற்போது வடக்கில் அவரவர் உரிமை கோரும் எல்லைகளுக்குத் திரும்பிச் சென்று, முன்பிருந்த நிலையைப் பின்பற்ற வேண்டும்.

2020-ஆம் ஆண்டு இருநாட்டு ராணுவ வீரர்கள் மோதிக் கொண்டதில் இந்திய வீரர்கள் 20 பேர் வீரமரணமடைந்த சம்பவத்துக்கு முன்பு, எல்லையில் இந்திய வீரர்கள் ரோந்து மேற்கொண்ட பகுதிகளில் மீண்டும் அவர்கள் ரோந்து செல்லும் நிலை ஏற்பட வேண்டும்.

இப்போது எல்லையில் டெம்சோக், டெப்சாங்கை தவிர இதர அனைத்து இடங்களுக்கும் இந்திய வீரர்களால் திரும்பிச் செல்ல முடிந்துள்ளது.

டெம்சோக், டெப்சாங் தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. பேச்சுவார்த்தை சுமுகமாக நடைபெற்று அந்த இடங்களுக்கும் திரும்ப முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

அது நடைபெறும் வரை, எல்லையில் தொடர்ந்து விழிப்புடன் இருக்க வேண்டும். அதைச் செய்யும்போது எல்லையில் தேவையில்லாத பிரச்னை எழாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

**மணிப்பூர் சவால்களைத் தீர்க்க நேரமாகும்:** மணிப்பூர் சூழல் குறித்து அனில் சௌஹானிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர் அளித்த பதில்:


கடந்த 2020-ஆம் ஆண்டுக்கு முன்பாக மணிப்பூரில் ராணுவம் மற்றும் அஸ்ஸாம் ரைஃபிள்ஸ் படையினர் குவிக்கப்பட்டனர். வடக்கு எல்லைகளில் சவால்கள் அதிகமாக இருந்ததாலும், மணிப்பூரில் கிளர்ச்சி சூழல் இயல்பு நிலைக்கு மாறியதாலும் அங்கிருந்து படைகளை விலக்கிக் கொள்ள முடிந்தது.

ஆனால் தற்போது மணிப்பூரில் நிலவும் சூழல் கிளர்ச்சியுடன் தொடர்புடையதல்ல. அது இரண்டு இனக்குழுக்களுக்கு இடையிலான மோதல் மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்னையாகும். இந்தப் பிரச்னையில் மணிப்பூர் அரசுக்கு ராணுவம் உதவி வருகிறது. அந்த மாநிலத்தில் நிலவும் சவால்களைத் தீர்க்க சிறிது நேரமாகும் என்று தெரிவித்தார்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# ராணுவம் சாராதவரை முதல்முறையாக விண்வெளிக்கு அனுப்பிய சீனா





ஷென்ஷு-16 விண்கலத்தில் 3 பேருடன் செவ்வாய்க்கிழமை விண்ணில் பாய்ந்த மார்ச்-2எஃப் ராக்கெட். (இடமிருந்து) குய் ஹாய்சாவ், ஜிங் ஹைபெங், ஷு யங்ஷு.

**பெய்ஜிங், மே 30:** ராணுவம் சாராத ஒருவரை சீனாவின் விண்வெளி ஆய்வு நிலையம் முதல் முறையாக செவ்வாய்க்கிழமை வெற்றிகரமாக விண்வெளிக்கு அனுப்பியது.

சீனா சொந்தமாக உருவாக்கியுள்ள தியாங்காங் விண்வெளி நிலையத்துக்கு 3 விண்வெளி வீரர்களை தனது ஷென்ஷு-16 விண்கலம் மூலம் அந்த நாடு செவ்வாய்க்கிழமை அனுப்பியது.

லாங் மார்ச்-2எஃப் ராக்கெட் மூலம் ஏவப்பட்ட அந்த விண்கலம் வெற்றிகரமாக விண்வெளி நிலையத்தை அடைந்தது.

கல்லூரி பேராசிரியரும், ஆய்வாளருமான குய் ஹாய்சாவ், விண்கல தலைவர் ஜிங் ஹைபெங், விண்வெளி பொறியாளர் ஷு யங்ஷு ஆகிய மூவரும் அந்த விண்கலத்தின் மூலம் தியாங்காங் விண்வெளி நிலையம் சென்றனர்.

இவர்களில் குய் ஹாய்சாவ்தான் விண்வெளிக்கு அனுப்பப்பட்டுள்ள ராணுவத்தைச் சாராத முதல் சீனர் ஆவார். அத்துடன், விண்கலத் தலைவரான ஜிங் ஹைபெங் இதுவரை இல்லாத வகையில் 4-ஆவது முறையாக விண்வெளிக்குச் சென்றுள்ள சீனர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

கடந்த 2003-ஆம் ஆண்டில் ஷென்ஷு-5 விண்கலம் மூலம் விண்வெளி வீரர் ஒருவரை சீனா முதல்முறையாக விண்வெளிக்கு அனுப்பியது.

அதையடுத்து, ரஷியா, அமெரிக்காவுக்குப் பிறகு சொந்த முயற்சியில் விண்வெளிக்கு மனிதரை அனுப்பிய 3-ஆவது நாடு என்ற பெருமையை சீனா பெற்றது.

அதன் பிறகு பலரை சீனா விண்வெளிக்கு அனுப்பினாலும், அவர்கள் அனைவரும் அந்த நாட்டு ராணுவத்தில் பணியாற்றி, அதன் விண்வெளி ஆய்வுப் பிரிவில் இணைந்தவர்களாக இருந்தனர்.

இந்த நிலையில், முதல்முறையாக ராணுவத்தைச் சாராத ஒருவர் சீனாவால் முதல்முறையாக தற்போது விண்வெளிக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

# ஜூனில் உளவு செயற்கைக்கோள்

## வட கொரியா



ஓவியரின் கற்பனை.

**சியோல், மே 30:** தாங்கள் உருவாக்கியுள்ள உளவு செயற்கைக்கோளை முதல்முறையாக வரும் ஜூன் மாதத்தில் விண்ணில் செலுத்தவுள்ளதாக வட கொரியா அறிவித்துள்ளது.

இது குறித்து அந்த நாடு செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வரும் ஜூன் மாதத்தில் எங்களது உளவு செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்படும். அதன் பிறகு, அமெரிக்காவும், தென் கொரியாவும் அவ்வப்போது நடத்தி வரும் கண்மூடித்தனமான கூட்டு ராணுவப் பயிற்சிகள் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, வரும் 31-ஆம் தேதியிலிருந்து ஜூன் 11-ஆம் தேதிக்குள் செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், அதனால் மஞ்சள் கடல், கிழக்கு சீனக் கடலில் ஏதாவது பாதிப்பு ஏற்படலாம் என்றும் ஜப்பான் கடலோரக் காவல் படைக்கு வட கொரியா திங்கள்கிழமை எச்சரிக்கை விடுத்திருந்தது.

# 22% சரிந்த அந்நிய நேரடி முதலீடு



**புது தில்லி, மே 30:** கடந்த 2022-23-ஆம் நிதியாண்டில் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட அந்நிய நேரடி முதலீடு 22 சதவீதம் சரிவைக் கண்டுள்ளது.

இது குறித்து தொழில் மற்றும் உள்நாட்டு வணிக மேம்பாட்டுத் துறை வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்கள் தெரிவிப்பதாவது:

கடந்த மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த 2022-23-ஆம் நிதியாண்டில் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட அந்நிய நேரடி முதலீடு சுமார் 4,600 கோடி டாலராக இருந்தது.

இது, முந்தைய 2021-22-ஆம் நிதியாண்டோடு ஒப்பிடுகையில் 22 சதவீதம் குறைவாகும். அப்போது அந்நிய நேரடி முதலீடு 5,877 கோடி டாலராக இருந்தது.

கடந்த ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலாண்டில் அந்நிய நேரடி முதலீடு 40.55 சதவீதம் சரிந்து 928 கோடி டாலராக உள்ளது.

கடந்த 2022-ஆம் ஆண்டு ஜனவரியில் 640 கோடி டாலர், பிப்ரவரியில் 461 கோடி டாலராக இருந்த அந்நிய நேரடி பங்கு முதலீடு, இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் 405 கோடி டாலராகவும், பிப்ரவரி மாதத்தில் 285 கோடி டாலராகவும் வீழ்ச்சியடைந்தது. அதேபோல் கடந்த ஆண்டின் மார்ச் மாதத்தில் 460 கோடி டாலராக இருந்த அது, இந்த மார்ச்சில் 238 கோடி டாலராக சரிந்தது.



பங்கு முதலீடு உள்ளிட்ட ஒட்டுமொத்த அந்நிய நேரடி முதலீடு கடந்த நிதியாண்டில் 7,097 கோடி டாலராக இருந்தது. முந்தைய 2021-22-ஆம் அந்நிய நேரடி முதலீட்டுடன் ஒப்பிடுகையில் இது 16 சதவீதம் குறைவாகும். அப்போது அது 8,483 கோடி டாலராக இருந்தது.

கடந்த நிதியாண்டில் இந்தியாவில் நேரடி முதலீடு செய்த நாடுகளில் சிங்கப்பூர் முதலிடத்தில் உள்ளது. அந்த ஆண்டில் அங்கிருந்து 1,720 கோடி டாலர் முதலீடு செய்யப்பட்டது.

சிங்கப்பூருக்கு அடுத்தபடியாக மோரீஷஸ் அதிக அளவாக 613 கோடி டாலரை இந்தியாவில் நேரடியாக முதலீடு செய்தது.



600 கோடி டாலர் நேரடி முதலீட்டுடன் அமெரிக்கா 3-ஆவது இடத்திலும், 335 கோடி டாலர் முதலீட்டுடன் ஐக்கிய அரபு அமீரகம் 4-ஆவது இடத்திலும் உள்ளன.

நெதர்லாந்து (250 கோடி டாலர்), ஜப்பான் (180 கோடி டாலர்), பிரிட்டன் (173 கோடி டாலர்), சைப்ரஸ் (127 கோடி டாலர், கேமன் ஐலண்ட் (77.2 கோடி டாலர்), ஜெர்மனி (54.7 கோடி டாலர்) இந்தியாவில் நேரடி முதலீடு செய்துள்ளன.

கடந்த ஆண்டு பெறப்பட்ட அந்நிய நேரடி முதலீடுகளில் கணினி மென்பொருள் துறை மற்றும் உதிரிபாகங்கள் துறை முக்கியப் பங்கு வகிக்கின்றன. எனினும், முந்தைய 2021-22-ஆம் நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் அவை சரிவைக் கண்டுள்ளன. அப்போது 1,450 கோடி டாலராக இருந்த அந்தத் துறை மீதான அந்நிய நேரடி முதலீடு, கடந்த 2022-23-ஆம் நிதியாண்டில் 940 கோடி டாலராக வீழ்ந்தது.

அதேபோல், வாகனத் துறையிலும் கடந்த 2021-22-ஆம் நிதியாண்டில் சுமார் 700 கோடி டாலராக இருந்த அந்நிய நேரடி முதலீடு 2022-23-ஆம் நிதியாண்டில் 190 கோடி டாலராகக் குறைந்தது.

மேலும், உள்கட்டமைப்புத்துறை, உலோகவியல் தொழில் துறையிலும் கடந்த நிதியாண்டில் அந்நிய நேரடி முதலீடு குறைந்து போனது.

இது போன்ற காரணங்களால் கடந்த நிதியாண்டில் ஒட்டுமொத்த அந்நிய நேரடி முதலீடு 22 சதவீதம் சரிவைக் கண்டுள்ளது என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# தமிழகத்தில் ரூ.128 கோடியில் ரத்த அழுத்த மானிட்டர் தொழிற்சாலை

## முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் ஓம்ரான் நிறுவனம் ஒப்பந்தம்

**சென்னை, மே 30:** ஜப்பானின் ஓம்ரான் ஹெல்த்கேர் நிறுவனம் ரூ.128 கோடியில் தமிழகத்தில் தானியங்கி ரத்த அழுத்த மானிட்டர் உற்பத்தி தொழிற்சாலை தொடங்க, முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் செவ்வாய்க்கிழமை புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது.

தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஜப்பான் தலைநகரான டோக்கியோவில் பயணம் மேற்கொண்டு வரும் நிலையில், அங்குள்ள முன்னணி நிறுவனமான ஓம்ரான் ஹெல்த்கேர் நிறுவனம் தமிழகத்தில் மருத்துவ உபகரண உற்பத்தி தொழிற்சாலையை தொடங்க புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

ஓம்ரான் நிறுவனம் தொழில் துறை ஆட்டோமேஷன், ஹெல்த்கேர், மின்னணு பாகங்கள் தயாரிப்புகளில் ஈடுபட்டு வருகிறது. 120 நாடுகளுக்கு அதன் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்கி வருகிறது.

ஓம்ரான் ஹெல்த்கேர் நிறுவனம் டிஜிட்டல் ரத்த அழுத்த மானிட்டர்கள், சுவாச சிகிச்சைக்கான நெபுலைசர்கள் ஆகியவற்றை தயாரித்து விற்பனை செய்வதில் உலக அளவில் முன்னணி நிறுவனமாக விளங்குகிறது.

குறைந்த அதிர்வெண் வலி சிகிச்சை உபகரணங்கள், மின்னணு வெப்பமானிகள், உடல் அமைப்பு மானிட்டர்கள் உற்பத்தியிலும் அந்நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. இந்த நிறுவனமும் தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனமும் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ரூ.128 கோடியில் தானியங்கி ரத்த அழுத்த மானிட்டர்களுக்கான உற்பத்தி தொழிற்சாலையை தமிழகத்தில் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டன.

அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

ஓம்ரான் நிறுவனத்தின் முதலீடு, தமிழகத்தில் தொழில் தொடங்குவதற்கு உகந்த சூழ்நிலை மீதான தங்களின் நம்பிக்கையை மட்டுமின்றி, வெற்றிகரமான அதன் மருத்துவ கட்டமைப்பின் மீதான நம்பிக்கையையும் எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

தமிழகம் சுகாதாரத்துக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. எளிதில் கிடைக்கக்கூடிய தரமான மருத்துவ சேவைகளை தமிழக அரசு வழங்கி வருகிறது. மருத்துவத் துறைக்கான உற்பத்தி தொழிலை தொடங்குவதன் மூலம் தமிழகத்தின் மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்துவதில் ஓம்ரான் நிறுவனம் முக்கிய பங்காற்றவிருக்கிறது என்றார்.

நிகழ்ச்சியில் தமிழக தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா மற்றும் துறை உயரதிகாரிகள் பங்கேற்றனர்.




தமிழ்நாட்டில் ஜப்பான் ஓம்ரான் ஹெல்த்கேர் நிறுவனம் சார்பில் ரூ.128 கோடியில் தானியங்கி ரத்த அழுத்த மானிட்டர் உற்பத்தி ஆலையை நிறுவுவதற்காக டோக்கியோவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் செவ்வாய்க்கிழமை பரிமாறிக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம். உடன் தமிழக தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, துறையின் கூடுதல் தலைமைச் செயலர் எஸ்.கிருஷ்ணன், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவன மேலாண் இயக்குநர் வே.விஷ்ணு, ஓம்ரான் ஹெல்த்கேர் நிறுவன முதன்மைச் செயல் அலுவலர் அயுமு ஒகடா, செயல் அலுவலர் சுகேோ குரியாமா, ஓம்ரான் ஹெல்த்கேர் தயாரிப்பு ஆலையின் வியத்நாம் தலைவர் டாகுடோ இவாசகா.

# உக்ரைன் போர்: மாஸ்கோ மீது முதல்முறையாக தாக்குதல்

**மாஸ்கோ, மே 30:** உக்ரைன் போரில் முதல் முறையாக ரஷிய தலைநகர் மாஸ்கோவில் ஆளில்லா விமானங்கள் மூலம் செவ்வாய்க்கிழமை அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மாஸ்கோ மீது நடத்தப்பட்ட மிகப் பெரிய தாக்குதல் இது என்று கூறப்படுகிறது.

உக்ரைன் மீது போர் தொடுத்ததற்குப் பிறகு தங்கள் எல்லைக்குள் அந்த நாடு அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருவதாக ரஷியா கூறி வருகிறது.

அண்மையில், அதிபர் விளாதிமீர் புதினை படுகொலை செய்யும் நோக்கில் கிரெம்ளின் மாளிகை மீது ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், அந்தத் தாக்குதலுக்கு உக்ரைன்தான் காரணம் என்றும் ரஷியா கூறியிருந்தது.

இந்த நிலையில், மாஸ்கோ முழுவதும் தற்போது நடத்தப்பட்டுள்ள தாக்குதலுடனும் உக்ரைனுக்குத் தொடர்புள்ளதாக ரஷியா குற்றம் சாட்டியது.

இது குறித்து ரஷிய பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாஸ்கோ நகரின் மீது செவ்வாய்க்கிழமை அதிகாலை ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது. அவற்றில் 5 விமானங்கள் வான்பாதுகாப்பு ஏவுகணைகள் மூலம் இடைமறித்து அழிக்கப்பட்டன. மேலும் 3 விமானங்களின் மின்னணு சாதனங்கள் முடக்கப்பட்டு அவை திசைமாற்றப்பட்டன.

இது, உக்ரைன் அரசு நடத்தியுள்ள 'பயங்கரவாத' தாக்குதலாகும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாஸ்கோ மேயர் செர்கேய் சோப்யானின் கூறுகையில், செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட ஆளில்லா விமானத் தாக்குதலால் ஏராளமான கட்டடங்களில் லேசான சேதம் ஏற்பட்டதாகத் தெரிவித்தார்.



ஆளில்லா விமானத் தாக்குதலுக்குள்ளான மாஸ்கோ நகர அடுக்குமாடி குடியிருப்புகள்.

## 'தாக்குதல் இனி அடிக்கடி நடக்கும்'



மிகயிலோ பொடோலியக்

மாஸ்கோ மீதான தாக்குதலுக்கு தாங்கள்தான் காரணம் என்று ரஷியா கூறியுள்ளதை உக்ரைன் மறுத்துள்ளது.

இது குறித்து உக்ரைன் அதிபரின் ஆலோசகர் மிகயீலோ பொடோலியக் கூறுகையில், 'எங்களுக்கும் இந்தத் தாக்குதலுக்கும் தொடர்பில்லை. இருந்தாலும் இந்தத் தாக்குதலைக் காண்பதற்கு மகிழ்ச்சியாக உள்ளது. இது போன்ற தாக்குதல்கள் இனி அடிக்கடி நடைபெறும்' என்றார்.

இந்தத் தாக்குதலால் மிதமாகக் காயமடைந்த 2 பேருக்கு மருத்துவ உதவி அளிக்கப்பட்டதாகவும், இரண்டு அடுக்கு மாடி கட்டடங்களில் இருந்தவர்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

தங்களுக்கு எதிராக உருவாக்கப்பட்ட நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைந்தால், அது தங்களது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று ரஷியா கூறி வருகிறது.

அதனையும் மீறி நேட்டோ அமைப்பில் இணைய வொலோதிமீர் ஸெலென்ஸ்கி தலைமையிலான உக்ரைன் அரசு விருப்பம் தெரிவித்தது.

அதையடுத்து அந்த நாட்டின் மீது ரஷியா கடந்த ஆண்டு பிப்ரவரி 24-ஆம் தேதி படையெடுத்து, கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைனின் லுஹான்ஸ்க், டொனெட்ஸ்க், ஸபோரிஷியா, கெர்சான் ஆகிய 4 பிராந்தியங்களில் கணிசமான பகுதிகளை கைப்பற்றியுள்ளது.

அந்தப் பிராந்தியங்களில் எஞ்சியுள்ள பகுதிகளைக் கைப்பற்றுவதற்காக ரஷியாவும், ரஷியாவிடமுள்ள பகுதிகளை மீட்பதற்காக உக்ரைன் ராணுவமும் தொடர்ந்து சண்டையிட்டு வருகின்றன.

இந்தப் போரில் உக்ரைனின் போரிடும் திறனைக் குறைப்பதற்காக அந்த நாட்டின் தலைநகர் கீவ் உள்பட பல்வேறு பகுதிகளில் ரஷியா அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறது. செவ்வாய்க்கிழமைகூட ரஷியா நடத்திய தாக்குதலில் ஒருவர் உயிரிழந்ததாக உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

உக்ரைனும் ரஷிய எல்லைக்குள் பல முறை தாக்குதல் நடத்தியதாக தகவல்கள் வெளியாகி வந்தன.

இந்த நிலையில், ரஷிய தலைநகர் மாஸ்கோவில் ஆளில்லா விமானங்கள் மூலம் முதல்முறையாக பெரிய அளவில் தற்போது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.